
சி.எஸ்.ஐ. கோவை திருமண்டலம்

# விண்மணி

அக்டோபர் 2023



## REFORMATION

திங்கள் இதழ்
அக்டோபர் 2023

www.csicoimbatorediocese.com


THE LORD IS PEACE


THE LORD













# ஆசிரியர் மடல்!!



அருட்பணி.சா. பிரின்ஸ் கால்வின்
ஆசிரியர் & செயலாளர்

அன்பு நண்பர்களே,

இம்மாத இதழ் வாயிலாக உங்களை சந்திப்பதில் மிக்க மகிழ்ச்சியடைகிறேன். தொடர்ந்து "விண்மணி" ஒலிக்க உங்கள் அனைவரின் ஆதரவையும், பங்களிப்பையும் அளித்திட வேண்டுகிறேன். கட்டுரை, கவிதை, சரித்திரம் மற்றும் திருச்சபைக்கும், சமுதாயத்திற்கும் பயன்தரும் படைப்புகளை ஒவ்வொரு மாதமும் 15-ம் தேதிக்குள் ஆசிரியர் முகவரிக்கு மின்னஞ்சல் (csicbevinmani@gmail.com) (Whatsapp:99434 54619) வாட்ஸ் ஆப் மற்றும் கடிதம் மூலம் அனுப்பவும்.

அக்டோபர் மாதம் திருச்சபை வரலாற்றில் மிக முக்கிய மாதமாகும். சீர்திருத்தத் திருச்சபை (Protestant Church) உருவாவதற்கு காரணமாயிருந்த மார்டின் லூத்தர் முதல் முறையாக 1517- ம் ஆண்டு அக்டோபர் மாதம் 31-ம் தேதி, தனது 95 (Ninety – Five Theses ) ஜெர்மனியிலுள்ள விட்டன்பர்க் ஆலயத்தில் கதவுகளில் ஆணியடித்து தொங்கவிட்டார். இதில் அவர் அன்றைய ரோமன் கத்தோலிக்க திருச்சபையில் காணப்பட்ட திருமறைக்கு எதிராள சடங்குகளையும், மூட நம்பிக்கைகளையும், அதிகார துஷ்பிரயோகத்தையும், பாவமன்னிப்புக்கான கட்டணம் (Indigence), போப்பின் அதிகாரம் ஆகியவற்றை எதிர்த்து, எழுதப்பட்டிருந்தது. அவருடைய போதனைகளில் மிக முக்கிய மூன்று ;

விசுவாசத்தினால் மட்டுமே !
கிருபையினால் மட்டுமே !
திருமறை வார்த்தைகளினால் மட்டுமே ! "

"By faith alone! By grace alone! and by Scripture alone'.

இவர் மூலம் 14-ம் நூற்றாண்டில் மிகப்பெரிய ஆன்மீக புரட்சி (Reformation) சபைக்குள் ஏற்பட்டு, சீர்திருத்தத் திருச்சபை உருவானது. 508 ஆண்டுகளுக்குப்பின்பும் மார்டின் லூத்தரின் போதனைகள் உலகளவிலே ஆழமான பாதிப்புகளையும், மாற்றங்களையும் உருவாக்கி வருகிறது,இன்னும் திருச்சபைகளில் களையப்பட வேண்டிய தீமைகள் பல உண்டு. மார்டின் லூத்தர் தொடங்கிய சீர்திருத்தங்களான இன்னும் தொடர நாம் அழைக்கப்படுகிறோம். நமக்குள் உள்ள கருத்து வேறுபாடுகளையும், விரோதங்களையும், களைந்துவிட்டு, புது சிந்தையோடு, சீர்திருத்தப்பாதையில் வெற்றியோடு பயணிப்போம்.

கடவுளின் கிருபையும்,
சமாதானமும் உங்களோடு
இருப்பதாக.

# விண்மணி

சி.எஸ்.ஐ. கோவை திருமண்டலம்

பந்தய சாலை,கோவை -18

## இலக்கியக் குழு

Rt Rev **திமோத்தி ரவீந்தர்**

பேராயர் -தலைவர்

Rev **சா. பிரின்ஸ் கால்வின்**

ஆசிரியர் & செயலாளர்

**திரு. D.S.அமிர்தம்**

பொருளாளர்

**www.csicoimbatorediocese.com**

**csi coimbatore diocese**

**csicbevinmani@gmail.com**

**csicoimbatorediocese**

தகவல் தொடர்பு மையம் வெளியீடு



பேருட்திரு. தீமோத்தி ரவீந்திரன்
பேராயர்

திருச்சபையின் நாயகராம், இயேசுகிறிஸ்துவின் இனிய திருப்பெயரில் உங்கள் அனைவரையும் வாழ்த்துகிறேன்.

இன்று பல்வேறு விதமான பாரம்பரியங்கள் நிறைந்த திருச்சபைகள் உள்ள நாட்டில் நாம் வாழ்ந்து கொண்டிருக்கிறோம். அதிலும் குறிப்பாக சீர்திருத்த திருச்சபையின் அங்கத்தினர்களாக, ஒரே குடும்பமாக நாம் இணைந்திருப்பதில் மகிழ்ச்சி அடைகின்றேன். திருச்சபையின் வரலாற்றில் நடைபெற்ற மாபெரும் புரட்சியை அனைவரும் அறிவோம். மார்ட்டீன் லூத்தர் என்ற மாமனிதனை ஆண்டவர் இந்த பணிக்காக பயன்படுத்தினார். திருச்சபையின் வாழ்வும், பணியும் புது வேகத்தில் வளர்ச்சி பெற்றது இன்று உங்களையும் இதே பணிக்காக பயன்படுத்த விரும்புகின்றார்.

இயேசு கிறிஸ்துவும், தனது பணி வாழ்வில் மக்களை சீர் திருத்தவும், தவறான பக்தியை சுட்டிக்காட்டவும் தயங்கவில்லை. பாரம்பரியத்தின் பெயரால் நடத்தப்படும் போலி பக்தியை அவர் ஒருபோதும் புனிதமாகக் கருதவில்லை ஆடம்பர ஆராதனைகளை ஆர்வமாக வரவேற்கவும் இல்லை. மாபெரும் கட்டிடங்களை கட்ட வேண்டும் என எவரையும் ஊக்கப்படுத்தவும் இல்லை. ஆனால் அவரின் பணியில் ஒரு இலக்கு இருந்தது. முடிவில், அனைவருக்குமான சமத்துவ வாழ்வு வாக்கு பண்ணப்பட்டிருந்தது. அதே சமயம், அவரை பின்பற்றுகிற இன்றைய திருச்சபை எதை நோக்கி பயணமாகிறது என்கிற கேள்வியை உங்கள் முன்பாக வைக்க விரும்புகின்றேன்.

தனிமனித வாழ்வில், எத்தனையோ, தவறான பாதையில் நாம் சென்று கொண்டிருக்கும் போது அவர்களை சீர்திருத்தும் பொறுப்பு யாரிடம் உள்ளது? திருச்சபையின் வாழ்வும் வளர்ச்சியும் திசை மாறும் போது அதை சீர்த்திருத்தம் பணி யாரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது? தவறான கள்ள உபதேசங்கள் பெருகும் போது, அவற்றை கடிந்து கொண்டு உண்மையான உபதேசத்தை செய்வது யார்? இது போன்ற கேள்விகளுக்கெல்லாம் விடை தேட முயற்சிக்கும் போது, கடவுள் உங்களையே இந்த சிறப்பான பணிக்காக அழைத்திருக்கின்றார் என்பதை மறந்து போக வேண்டாம். ஆனால் இந்த சீர்த்திருத்தமானது திருமறையின் வார்த்தைகளால் மட்டும் சாத்தியமாகும் என்பதையும் மறந்துவிடக்கூடாது,

இம்மாதம் சீர்த்திருத்த திருநாளைக் கொண்டாட ஆயத்தமாக நிற்கின்றோம். ஆண்டவரின் விருப்பத்தை நிறைவேற்ற நம்மை அர்ப்பணிப்போம் முதலாவது நாம் தனி மனித வாழ்வில் சீர்திருத்த விழைவோம், அதனைத் தொடர்ந்து பொது வாழ்விலும் சமூக வாழ்விலும், திருச்சபை வாழ்விலும் சீர்த்திருத்தத்தை கொண்டு வர முயற்சிப்போம்.

**இந்த பணி தொடர்ந்து தொய்வின்றி நடைபெற ஆண்டவர் தாமே உதவி செய்வாராக. ஆமென்.**



அன்பரா
ம் இயேசுகிறிஸ்துவின் இனிய நல் நாமத்தில் அன்பான வாழ்த்துக்கள்.

இந்த மாதம் (அக்டோபர்) நம் திருச்சபைகளுக்கு (PROTESTANT CHURCH) ஒரு முக்கியமான மாதமாகும். என்ன விசேஷம் என எண்ணுகிறோம் அல்லவா ஆம் உண்மையாகவே இம்மாதம் தான் அதிகால திருச்சபையிலிருந்த தேவையற்ற சடங்காச்சாரங்களை விடடு, சீர்திருத்தத் திருச்சபை பிறந்த மாதமாகும். 500 ஆண்டுகளுக்கு முன் சராசரி மனிதர்களின் ஆளுமைக்கு உட்பட்டிருந்த கிறிஸ்தவம் விழித்தெழுந்த மாதமாகும். சீர்திருத்தத் திருச்சபை பிறந்த மாதமாகும். 500 ஆண்டுகளுக்கு முன் சராசரி மனிதர்களின் ஆளுமைக்கு உட்பட்டிருந்த கிறிஸ்தவம் விழித்தெழுந்த மாதமாகும். சீர்திருத்தத் திருச்சபையின் தந்தையாக கருதப்படும் ஆயர் மார்டின் லூத்தர் அவர்களால் சீர்திருத்தம்உருவானது, இது ஒரே நாளில் உண்டானது அல்ல, பல நாடுகளில், பல மக்களின் பல நாட்களின் கடினப்பாடுகளோடு உருவானதாகும். இச்சீர்திருத்தம் உருவானதால் மக்களிடையே மங்கிப்போய் இருந்த அரசியல் மாற்றங்கள் அறிவின் வளர்ச்சிகள், தகுதியுள்ள மக்களை ஏற்படுத்துதல், கல்வியறிவின் மேன்மை நற்பண்புகளின் வளர்ச்சி போன்றவை தூண்டி சீர்மிகுந்து காணப்பட்டது. சீர்திருத்தத் தந்தையின் (ஆயர் மார்டின் லூத்தர்) தயவால், மிக மிக முக்கியமாக உன்னதமாக காணப்பட்ட மாற்றங்கள் என்னவெனில்

1. பாவமன்னிப்புச் சீட்டு விற்பனை நிறுத்தப்பட்டது.
2. லத்தீன் மொழியின் மட்டுமேயிருந்த பரிசுத்த வேதாமம் பல மொழிகளில் மொழி பெயர்க்கப்பட பல்கலைக்கழகங்கள் உருவாக்கப்பட்டது.
3. அச்சு இயந்திரங்கள் கண்டுபிடிக்கப்பட்டு, பரிசுத்த வேதாகமம் பல மொழிகளில் அச்சிடப்பட்டு மக்களுக்கு சென்றடைந்தது.
4. மக்களம் ஆர்வத்துடன் வேதாகமத்தை பெற்று படித்து பிதாவின் உன்னத சித்தத்தை குமாரனின் மேன்மை மிக்க செயல்பாடுகளையும் பரிசுத்த ஆவியானவரின் வழி நடத்துதலையும் புரிந்து பூரிப்படைந்தனர்.

1551-ல் இங்கிலாந்து பேராயர் கூப்பர் அவர்கள் 373 குருமார்களை அழைத்து 10 கட்டளைகள் விசுவாசப் பிரமாணம் மற்றும் கர்த்தர் நமக்கு கற்றுக்கொடுத்த பரமண்டல ஜெபம் ஆகியவற்றைக் கேட்டார். ஆனால் என்னே ஒரு பரிதாபமான நிலை 90 குருமார்கள் மட்டுமே அதில் தேர்ச்சி பெற்றனர். ஆனால் அவற்றையெல்லாம் மாற்றியது இந்த திருச்சபை சீர்திருத்தம் தான். இதனால் நன்மை பெற்றவர்கள் குருமார்கள் மட்டுமல்ல அநேக மக்களும் வேத அறிவு பெற்றனர். வேதத்தை நன்முறையில் ஆராய முற்பட்டனர். அப்படிப்பட்ட வரலாற்று சிறப்புமிக்க மாதத்திற்குள் நுழைந்துள்ள நாம் இந்த திருச்சபை சீர்தீருத்தத்தால் பெற்ற நன்மைகளையும், ஆசீர்வாதங்களையும எண்ணிப்பார்ப்பது கிறிஸ்தவ வாழ்க்கையில் அவசியமான ஒன்றாகும்.

விசேஷமாக, பரிசுத்த வேதாகமம் நமது மொழியிலேயே நம் கையில் கிடைத்திருக்கும் போது அதை கருத்துடன் வாசித்து நம் வாழ்க்கையில் அநேக கிருபைகளையும் ஆண்டவரின் தயவையும் பெற்றிருக்கிறோம் என்பதில் எள்ளளவேனும் சந்தேகமில்லையல்லவா.

வேதத்தின் அடிப்படையில் சில சீர்திருத்தங்களைக் காண்போம். மத்தேயு 12:1-13 லூக்கா 6:1-10 ஆகிய வேதபகுதிகளை வாசிக்கும்போது நாம் காண்கிறதென்ன? ஆண்வராகிய இயேசு கிறிஸ்து பரிசேயரின் சடங்காச்சாரங்களை உடைத்தெறிகிறார். பரிசேயர் கேட்ட கேள்விகளுக்கு வேத வாக்கியங்களைக் கொண்டே (மத்தேயு 12:4.5.11,12) பதில் கொடுத்து அங்கு ஒரு பெரிய மாற்றத்தை ஏற்படுத்துகிறார். சூம்பின கையுடைய மனிதனை சுகமாக்குகிறார் இதனால் நீதிபரராகிய இயேசு கிறிஸ்துவை பரிசேயர் கொலை செய்யத் திட்டமிடும் நிலைமைக்கு செல்கிறார். இதன்மூலம் நாம் அறிந்துகொள்வதென்ன? நியாயமான உண்மையான வேதத்திற்கு ஏற்ற காரியங்களைச் செய்யும்போது ஆண்டவரின் சித்ததிற்கேற்ப அவரின் மனவிருப்பத்திற்கேற்றாற் போல் காரியங்களைச் செய்யும் போது பாடுகள் அநேகம் உண்டு.அதில் எந்த மாற்றமும் இல்லை. பரி. யோவான் 4:6-40ல், இப்பகுதியில் யூதர்கள் சமாரியருடன் சம்பந்தம் கலவாதவர்கள் (யோவா. 4:9) என அறிந்திருந்தும், ஆண்டவராகிய இயேசுகிறிஸ்து தண்ணிர் மொள்ள வந்த சமாரிய பெண்ணிடம் 'தாகத்துக்குத்தா' என்கிறார் யோவான் 4:40ல் சமாரியரிடத்தில் இரண்டு நாட்கள் தங்கி பின் இயேசு கிறிஸ்து கலிலேயாவிற்கு போகிறார் இப்பகுதிகளின் மூலம் நாம் அறிந்து கொள்ளும் விஷயங்கள், ஆண்டவராகிய இயேசு கிறிஸ்து அனைவருக்கும் தேவனாயிருக்கிறார் என்பதே அனைவரிடமும் அன்பு கூறுகிறார் என்பதே. அவர் சடங்காச்சாரங்களை அல்ல, சத்தியத்தையே விரும்புகிற ஆண்டவராயிருக்கிறார். நாம் நமது நிலையை சற்று சிந்தித்துப் பார்ப்போம். அப்போஸ்தலர் 10, 11ம் அதிகாரங்களை நாம் வாசிக்கும்போது ஆண்டவராகிய இயேசுகிறிஸ்து தன் சொந்த ஜனத்தாருக்கு மட்டுமல்ல, புற ஜாதியாருக்கும் தேவனாயிருக்கிறார் என்பதை பேதுரு மூலம் செயல்படுத்துகிறார் என்பதை அறியலாம்.

இனறைய உலக சூழ்நிலைகளை உற்றுநோக்கும்போது, யப்பா.... யப்பா.... என்னென்ன கடினமான பாதைகள் ஒவ்வொரு இனத்தாரும் தங்களுக்கென்று ஒரு பாதையை வகுத்துக்கொண்டு தங்கள் வாழ்நாட்களை கழிக்கும் போது பரிதாபமாக உள்ளது. ஆனால் அதற்கு நாம் காண்பிக்கும் தீர்வுதான் என்ன? நாமும் ஒரு சிர்திருத்தம் கொண்டுவர வேண்டாமா? நாம் செய்ய வேண்டியது நம்மில் ஆண்டவராகிய இயேசு கிறிஸ்து வெளிப்படவேண்டும். நாம் ஒருபாடல் பாடுகிறோமே.
" இயேசுவை வாழ்கையில் காட்டுங்களேன் பேச்சில் அல்ல செயலில் நல்ல இயேசுவை வாழ்வோராய் காட்டுங்களேன்" பாட்டு வடிவில் மட்டுமல்ல நம் வாழ்கையிலும் இதனை கொண்டு வரவேண்டும். ஈராயிரம் ஆண்டுகளுக்கு முன் ஆண்டவராகிய இயேசுகிறிஸ்து கற்பித்த புதிய பாதைகளை, தன் இனத்தாருக்கு மட்டுமல்ல புற இனத்தாருக்கும், பிதாவினால் சிருஷ்டிக்கப்பட்ட சகல பேர்களுக்கு உற்சாகமாக பறைசாற்றும் மக்களாக நாம் செயல்பட உறுதி கொள்வோம்.

ஒரு கட்டுக்குள், ஒரு சடங்குக்குள் வாழ்ந்து கொண்டிருந்த மக்களை, ஆயர் மார்டின் லூத்தர் அவர்கள் வழிப்படைய செய்து சீர்திருத்தம் செய்ததினால் நாம் வேதத்தை கூர்ந்து ஆராய முடிகிறதல்லவா. நம் வாழ்க்கையையும் ஆண்டவருக்கு ஒப்புக்கொடுப்பதே மேன்மையல்லவா. "ஊரோடு ஒத்துவாழ்" என்ற முதுமொழியை தேவையற்ற ஆண்டவருக்கு பிரியமில்லாத செயல்களுக்கு பயன்படுத்தி ஒரு சிறிய வட்டத்திற்குள்ளேயே வாழ்ந்து கொண்டிருக்கிறோமா? நமது மூதாதையர் நமக்கு கற்றுக்கொடுத்த, நமக்கென்று விட்டுச் சென்றுள்ள நன்மையான காரியங்களை ஆண்டவரின் நாமம் மகிமைப்பட, அவருடைய ராஜ்யத்திற்கு ஏற்றவர்களாய் அனைவரையும் மாற்ற நம்மை நாமே அர்ப்பணிப்போம் என்ற உறுதிப்பாட்டுடன் வாழ்வோம் என அன்புடன் அழைக்கும்.

உங்கள் அன்பு பேராயரம்மா.



Rev Prabhu Chandramohan
St Luke's Church, Kotagiri

கிறிஸ்துவுக்குள் அன்பான விண்மணியின் வாசக அன்பு நெஞ்சங்களே, இறைமகன் இயேசு கிறிஸ்துவின் இனிய திருப்பெயரால் உங்களை வாழ்த்துகிறேன்.

கிறிஸ்தவ சரித்திரத்திலே அக்டோபர் மாதம் 31ம் நாளை திருச்சபையின் சீர்திருத்த திருநாள் என நினைவுக்கூர்ந்து வருகிறோம். இந்த சீர்திருத்த திருநாள் என்பது புராட்டஸ்ட்ண்ட் சபை பிரிவினராகிய நம் அனைவருக்கும் வரலாற்று சிறப்பு மிகக ஒரு நாள் என்பதை நாம் அனைவரும் அறிந்து வைத்திருக்க வேண்டியது அவசியமாகும். 500 ஆண்டுகளுக்கு முன்னதான செய்திகளை உங்கள் முன்னே வைக்கிறேன். இந்த சீர்திருத்த திருநாளை ; “ மறுமலர்ச்சி – சீர்திருத்தம் – திருச்சபை உருவாக்கம்“ என மூன்று நிலைப்பாடுகளிலே எங்கு நாம் கற்றுக்கொள்கிறோம். அச்சு இயந்திரம் கண்டுபிடிக்கப்படும் முன்பு, 15ம் நூற்றாண்டுக்கு முன்னர், புத்தகங்கள் மிகவும் விலை உயர்ந்ததாக காணப்பட்டது. வேதாகமம் மற்றும் சமயம் சார்ந்த புத்தகங்கள் கைகளினால் எழுதப்பட்டு, மீண்டும் கைகளினாலேயே எழுதி பிரதிகள் எடுக்கப்பட்டன. அக்காலத்தில் ஒரே திருச்சபையாக இருந்த கத்தோலிக்க திருச்சபையின் துறவிகள், அருட்சகோதரிகள் வேதாகமம் மற்றும் சமயம் சார்ந்த புத்தகங்களை எழுதிக்கொண்டும் மற்றும் மறு பிரதிகளாகவும் எழுதிக்கொண்டிருந்தனர். மேலும், புத்தகங்கள் லத்தீன் மொழியிலேயே எழுதப்பட்டிருந்தது. திருமறையும் அவ்வண்ணமே லத்தீன் மொழியில் மட்டுமே இருந்தது. திருமறையை அநேக மக்கள் பார்த்தது கூட கிடையாது. ஏனெனில் அது மிகவும் விலை உயர்ந்த புத்தகமாக இருந்தது. பல்கலைக்கழகங்கள் பெரிய தேவாலயங்களில் மட்டும் வேதாகமம் வைக்கப்பட்டிருந்தது. எழுதவும், படிக்கவும் எல்லா மனிதருக்கும் தெரியாத காலம் அது. கற்றுக்கொள்ள விருப்பம் இருந்தாலும் கல்வியறிவு ஏழை எளிய மக்களக்கு எட்டாக்கனியாகவே இருந்தது. நிலம் படைத்தவர்கள் உயர்வானவர்களாகவும், நிலம் அற்றவர்கள் தாழ்ந்தவர்களாகவும் கண்ணோக்கப்பட்டார்கள்.

மறுமலர்ச்சி – Rennaisance 15ம் நூற்றாண்டு காலத்திற்கு முன்னர், ஐரோப்பிய கண்டத்தில், நிலம் உள்ளவர்கள் நிலச்சுவாந்தர்களாகவும், நிலம் அற்ற ஏழை, எளிய மக்கள் நிலச்சுவாந்தர்களிடம் கூலி வேலை செய்யும் பாமர மக்களாகவே இருந்தனர். தலைமுறை தலைமுறையாகவே இப்படி வாழ நேரிட்டது. இப்படிப்பறிவில்லா ஏழை பாமர மக்கள் படிக்க ஆசைப்பட்டாலும் வசதி போதாது படிக்கவும் புத்தகங்கள் கிடைக்காது. பாமரர்கள் தங்கள் வாழ்வை முனேற்றவதற்கு வழிகாணத் துடித் துடித்துக்கொண்டிருந்தனர். இது போன்ற கால கட்டத்தில், 1400 – 1450 ஆண்டு காலங்களில் பாமர மக்கள் மனதின் சிந்தனைகளிலே மாற்றம் ஏற்பட ஆரம்பித்தது, காரணம் இத்தாலி போன்ற இடங்களில் வாழ்ந்த வசதி படைத்த மக்கள் ரோம சாம்ராஜியத்தின் போர் குணங்களிலிருந்து தங்களை மாற்றி, பொழுது போக்கும் கலை வேலைப்பாடுகளில் ஈடுபட விரும்பினர், அது போலவே வாழவும் திட்டமிட்டனர். வசதி படைத்த மக்கள் கப்பல் பயணம் மேற்கொண்டு அநேக புதிய இடங்களுக்குச் செல்ல ஆரம்பித்தனர். அதுசமயம் ஆப்பிரிக்க கண்டம் கண்டறியப்பட்டது. அதுபோலவே அமெரிக்கா என்கிற புதிய கண்டத்தை கொலம்பஸ் கண்டுபிடித்தார். வளம் கொழிக்கும் செல்வங்கள் கண்டறியப்பட்டது. மேலும் செல்வங்களை தேடி அநேகர் பணக்காரன் எனும் நிலை மாறி, உழைப்பாளிகள் ஒரு புதிய எனும் நிலை உருவானது.

நிலச்சுவாந்தர்களின் பண்ணையில் வேலை செய்த கூலியாட்கள், பயணம் மேற்கொள்ளும் ஐரோப்பியரோடு புதிய இடங்களுக்கு செல்ல ஆரம்பித்தனர். தங்க சுரங்கம், நிலக்கரி சுரங்கம், இரும்பு சுரங்கம் போன்ற இடங்களில் பணியாற்றி ஊதியம் பெற ஆரம்பித்தனர், மேலும் நாள்பட்ட காலத்தில் தங்கள் வாழ்வின் தரத்தையும் உயர்த்த ஆரம்பித்தனர். இக்கால கட்டத்தில் கூட்டன்பர்க் என்ற

ஜெர்மனியர் அச்சு இயந்திரம் கண்டு பிடித்தார். கதை, கட்டுரை, நாடகம் மற்றும் சமயம் சார்ந்த புத்தகங்கள், வேதாகமம் அச்சில் ஏற்றப்பட்டு ஏழை – பணக்காரன், பாமரன் – செல்வந்தன் எனும் பாகுபாடின்றி எல்லோருடைய கைகளிலும் அச்சிடப்பட்ட புத்தகங்கள் கிடைக்கப்பெற்றது. பாமரர்களுக்கு சாமானியர்களும் கூட படிக்க ஆரம்பித்தனர். செல்வந்தர் – வறியவர் என்ற ஏற்றத்தாழ்வு நிலை மறையத் தொடங்கி, கல்வியறிவு மற்றும் கலையார்வம் மக்களை புதிய வாழ்வை நோக்கி வழி நடத்தியது. உழைக்கும் வர்க்கத்தினரின் வாழ்வில் தரம் உயர ஆரம்பித்த இக்கால கட்டத்தையே சரித்திரம் மறுமலர்ச்சியின் காலம் என நினைவு கூறுகிறது.

**சீர்திருத்தம் – Reformation** கி.பி, 1500 கால கட்டத்தில், மேற்கத்திய ஐரோப்பிய நாடுகளில் ஒரே திருச்சபையான ரோமன் கத்தோலிக்க திருச்சபை மாத்திரமே இருந்தது. இத்திருச்சபைக்கு தலைவராக ரோமாபுரியில் வசிக்கும் 'போப்' நியமனம் செய்யப்பட்டிருந்தார். போப் ஒரு அரசனுக்குரிய அதிகாரமும் மற்றும் அரசியல் செல்வாக்கு மிக்கவராகவும் திகழ்ந்தார். இத்தாலி நகரம் முழுவதும் ஸ்பெயின் போன்ற வல்லமை படைத்த நாடுகளும் போப்பன் – ரோமான் கத்தோலிக்க திருச்சபையின் உறுப்பினர்களாகவும், அரசியல் மற்றும் ஆன்மீக காரியங்களுக்கு அடிப்பணிந்து நடக்கும் நாடுகளாகவே இருந்தது. போப்பும் அவரின் கீழுள்ள கார்டினல்களும், பாதிரியார்களும் அதிகாரமும் செல்வாக்கும் பெற்றவர்களாகவே இருந்து வந்தனர். இராணுவம், போர், அரசியல் சார்பு நிலை – சாரா நிலை என திருச்சபையின் தலைவர்கள் அதிகார கோலோச்சினர், ஆன்மீக அறிவு என்பது இதுபோன்ற சபைத் தலைவர்களினாலே தவறாக வழிநடத்தப்பட்டது.

அரசியல் – அதிகாரங்களில் கவனம் செலுத்த ஆரம்பித்த திருச்சபைத் தலைவர்கள், தம்மை நோக்கி வரும் பெருமக்களின் ஆன்மீக தேடலுக்கு விசுவாச பாதை காண்பிக்க தவறினர். ஆன்மீக தேவையோடு வந்தோருக்கு திசை மாறிய பாதை காண்பிக்க ஆரம்பித்தனர். எல்லோரின் கைகளிலும் வேதாகமம் இல்லாதது இப்பெரியோர்களுக்கு எளிமையாக அமைந்தது. இந்நிலையில் தான் அச்சு இயந்திரம் கண்டு பிடிக்கப்பட்டது. பிறகு, இலக்கியங்களும், சமயம் சார்ந்த புத்தகங்களும், வேதாகமமும், "பல்கலைக் கழகம் – தேவாலயம்" போன்ற இடங்களிருந்து இடம் பெயர்ந்து சமானியர்கள் கைகளிலும் தவழ ஆரம்பித்தது. கிறிஸ்தவ போதனைகளை தேவாலய பாதியார்களிடம் மட்டும் கற்க முடியும் என்ற நிலைமாறி, படிக்கும் அறிவு பெற்ற அனைவரும் கிறிஸ்துவின் போதனைகளையும், சமயம் சார்ந்த போதனைகளையும் சுயமாக கற்றுக்கொள்ளும் காலம் துவங்க ஆரம்பித்தது. சுயமாக ஆன்மிக அறிவு பெற ஆரம்பித்த போது, திருச்சபையின் தலைவர்களுக்கு, அவர்களின் குறைகளை எடுத்துரைக்க – இடித்துரைக்க ஆரம்பித்தனர். ஜான் ஹஸ், ஜான் விக்ளிஃப் போன்றவர்கள், திருச்சபையின் தலைவர்களுக்கு எடுத்துரைத்த போதும் அவரைகளை ஏற்றுக்கொள்ள முடியாத அவர்கள் எடுத்துரைத்த மக்களையே தீக்கிரையாகவும், கொலை செய்யவும் துணிந்தனர்.

அந்த காலக்கட்டத்தில், ஜெர்மனி நாட்டில் கத்தோலிக்க திருச்சபையின் போதகராக மார்டீன் லூத்தர் அவர்கள் இருந்தார்கள். அவர்கள் திருமறையை ஆராய்ந்து வாசித்தபோது விசுவாசத்தினால் நீதிமான பிழைப்பான் ரோமர் 1:17 என்கிற வேதவசனம் அவரை தொட்டது. கிரியையினால் அல்ல கிருபையினாலேயே நமக்கு இரட்சிப்பு கிடைக்கிறது (எபே 2:8) மேலும் இயேசு கிறிஸ்துவினாலேயே நாம் இந்த மீட்பை பெறுகிறோம். (அப் 4:12) என்கிற வசனங்கள் மூலமாக கடவுளுடைய வார்த்தைகளே நமக்கு விசுவாசத்தையும், நம்பிக்கையும் அளிக்கிறது. ஆகவே நம்முடைய வாழ்வின் செயல் அனைத்திலும் கடவுளின் பெயர் மட்டும் மகிமைப்பட வேண்டும் என ஆழ்ந்த சத்தியங்களை தெளிவாக உணர்ந்தார்.

**மறுமலர்ச்சி – Renaissance**

15ம் நூற்றாண்டு காலத்திற்கு முன்னர், ஐரோப்பிய கண்டத்தில், நிலம் உள்ளவர்கள் நிலச்சுவாந்தர்களாகவும், நிலம் அற்ற ஏழை, எளிய மக்கள் நிலச்சுவாந்தர்களிடம் கூலி வேலை செய்யும் பாமர மக்களாகவே இருந்தனர். தலைமுறை தலைமுறையாகவே இப்படி வாழ நேரிட்டது. இப்படிப்பறிவில்லா ஏழை பாமர மக்கள் படிக்க ஆசைப்பட்டாலும் வசதி போதாது படிக்கவும்

புத்தகங்கள் கிடைக்காது. பாமரர்கள் தங்கள் வாழ்வை முனேற்றுவதற்கு வழிகாணத் துடித் துடித்துக்கொண்டிருந்தனர். இது போன்ற கால கட்டத்தில், 1400 – 1450 ஆண்டு காலங்களில் பாமர மக்கள் மனதின் சிந்தனைகளிலே மாற்றம் ஏற்பட ஆரம்பித்தது, காரணம் இத்தாலி போன்ற இடங்களில் வாழ்ந்த வசதி படைத்த மக்கள் ரோம சாம்ராஜியத்தின் போர் குணங்களிலிருந்து தங்களை மாற்றி, பொழுது போக்கும் கலை வேலைப்பாடுகளில் ஈடுபட விரும்பினர், அது போலவே வாழவும் திட்டமிட்டனர். வசதி படைத்த மக்கள் கப்பல் பயணம் மேற்கொண்டு அநேக புதிய இடங்களுக்குச் செல்ல ஆரம்பித்தனர். அதுசமயம் ஆப்பிரிக்க கண்டம் கண்டறியப்பட்டது. அதுபோலவே அமெரிக்கா என்கிற புதிய கண்டத்தை கொலம்பஸ் கண்டுபிடித்தார். வளம் கொழிக்கும் செல்வங்கள் கண்டறியப்பட்டது. மேலும் செல்வங்களை தேடி அநேகர் பணக்காரன் எனும் நிலை மாறி, உழைப்பாளிகள் ஒரு புதிய எனும் நிலை உருவானது.


**திருச்சபை உருவாக்கம் – Church Formation** இந்த உண்மைகளின் அடிப்படையில் மார்டீன் லூத்தர் தனது திருச்சபையை உற்று நோக்கியபோது, கத்தோலிக்க திருச்சபையானது இவற்றையெல்லாம் மீறி தவறான கொள்கைகளையும், பாரம்பரியங்களையும் பின்பற்றுவதையும் புரிந்துகொண்டார். எனவே மார்டீன் லூத்தர் இந்த தவறுகளை சுட்டிகாட்டி 95 நியாயங்கள்' (Ninety-FiveThesis) எழுதி அவற்றை மக்கள் அனைவரும் படித்து தெரிந்து கொள்ளும்படி 1517 – ஆம் ஆண்டு அக்டோபர் 31–ஆம் நாள் அன்று ஜெர்மனி நாட்டின் விட்டன்பர்க் (witten berg) நகரில் உள்ள கோட்டை தேவாலயம் (CastleChurch) கதவுகளில் ஒட்டி வைத்து கதவுகளில் ஒட்டி வைத்து மக்கள் அனைவரும் பார்க்கும்படி மேலும் படிக்கும்படி செய்தார். அந்த நாளே (அக்டோபர் 31) திருச்சபையில் சீர்திருத்தம் (Reformation Day) துவங்கிய நாளாக கருதப்படுகிறது.

மேலும் மார்டீன் லூத்தர் பல நூல்களை எழுதினார் இவற்றில் ரோமன் கத்தோலிக்க திருச்சபையில் பின்பற்றப்பட்டு வந்த பல தவறான கொள்கைகளையும் பழக்க வழக்கங்களையும் தைரியமாக சுட்டிக்காட்டி கண்டித்தார். பாவ மன்னிப்பு சீட்டு விற்பனை, கன்னி மரியாளை வழிபடுதல் கடந்த கால பரிசுத்தவான்களிடம் தங்களுக்காக வேண்டிக்கொள்ளும்படி மன்றாடுதல், இரட்சிப்பு பெற நற்கிரியைகள் செய்தலே போதுமானது போன்ற பல காரியங்களை சுட்டிக்காட்டினார். இவைகள் மூலம் அநேக சீர்திருத்த கருத்துக்கள் மக்களிடையே பரவியது. ஆனால் அதே சமயம் மார்டீன் லூத்தரையோ திருச்சபைக்கு எதிரானவர் என்று கூறி அவரை திருச்சபைக்கு புறம்பாக்கினர் அநேக அச்சுறுத்தல்களுக்கு உள்ளாக்கினர்.

மார்டீன் லூத்தர் அவர்கள் முழு வேதாகமத்தையும் தமது தாய் மொழியான ஜெர்மன் மொழியில் மொழி பெயர்த்தார். அவை அச்சிடப்பட்டு, பொது மக்கள் திருமறையை தாங்களாவே படித்து அறிந்து கொள்ளும்படி விநியோகம் செய்யப்பட்டது. மக்கள் அனைவரும் கடவுளின் வார்த்தையாம் வேதாகமத்தை கருத்துடன் படித்து தங்கள் பிழை உணர்ந்தனர். இவ்வறாக திருச்சபையின் சீர்திருத்தமானது வேத வசனங்களின் ஆதாரத்தோடு பிற நாடுகளுக்கும் பரவியது. அநேக மொழிகளில் வேதாகமம் அச்சிடப்பட்டது. மேலும் அநேக திருச்சபை தலைவர்கள் மற்றும் விசுவாசிகள் வேத வசனங்களுக்காக தங்கள் வாழ்வை அர்ப்பணித்தனர். ஆகவே தான் நாம் இன்று நமது தாய் மொழியாம் தமிழ் மொழியிலும கூட வேதாகமம் கிடைக்கப் பெற்றிருக்கிறோம்.

அன்பிற்குரியவர்களே இன்று நாம் சார்ந்திருக்கும் சி.எஸ்.ஐ. தென்னிந்திய திருச்சபையானது சீர்த்திருத்த திருச்சபையின் மரபிலே அமையப்பெற்ற திருச்சபையாகும். திருமறையை ஆழ்ந்து படித்து தியானித்து, அதின்படி நடந்து, நமது தனிப்பட்ட வாழ்வையும், குடும்ப வாழ்வையும், திருச்சபையின் சாட்சியையும் வேதவசனங்களோடு ஒப்பிட்டு காத்து நடப்பதுவே சீர்திருத்த திருச்சபையின் வழிமுறையாகும்.

**அன்பின் தேவஜனமே, அப்படிப்பட்ட வாழ்வு நாம் வாழ சர்வ வல்லமையுள்ள ஆண்டவர் தாமே நம் அனைவரையும் என்றும் வழிநடத்துவாராக !**





அருள் திரு.J. இராபின்சன் பிரபாகரன்
நீலகிரி வட்டகை தலைவர்

இயேசு கிறிஸ்துவின் இனிய நாமத்தில் என் அன்பின் வாழ்த்துக்கள். நீலகிரி வட்டகையில் வளர்ச்சி பணியிலும், முன்னேற்றப் பணியிலும், சிலவற்றை உங்களிடம் பகிர்ந்து கொள்கிறேன்.

1.மணிப்பூர் மாநிலத்தில் நடந்த சில வன்முறை சம்பவங்கள் மற்றும் தேவாலயங்கள் இடிக்கப்பட்டும், பெண்கள் வன்கொடுமைப்படுத்தப்பட்டும், மேலும் மக்களின் இயல்பு நிலை பாதிக்கப்பட்டு அவர் தம் வாழ்வாதாரங்கள் கேள்விக்குறியாக இருக்கும் பட்சத்தில் நீலகிரி வட்டகையில் அனைத்து கிறிஸ்தவ அமைப்புகளும் ஒன்று திரண்டு ஊட்டி, குன்னூர், கோத்தகிரி, ஆகிய மூன்று தாலூக்காவிலும் அமைதி ஊர்வலம் நடத்தி, அதனை சி.எஸ்.ஐ. குருவானவர்கள் தலைமையில் சிறப்பாக நடத்தி தங்கள் கண்டனத்தை அமைதி முறையில் தெரிவித்தனர்.

2. நீலகிரி வட்டகை சி.எஸ்.ஐ. நடுவட்டம் போதக சேகரத்தில் (கிராம சபை) குருமனை கட்டுமான பணி சிறப்பாக ஆயர் தலைவர் அருள்திரு. கவிராஜ் அவர்களும் ஆயர் அருள்திரு. ஜான்தாமஸ் அவர்களும் சிறப்பாக செய்து வருகிறார்கள்.

3. ஊட்டி சி.எஸ்.ஐ. ஜெல் மகளிர் மேல்நிலைப் பள்ளி 125வது ஆண்டை முன்னிட்டு, அதனை நினைவு கூறும் வகையில் பள்ளி புதுப்பிக்கப்பட்டு மேலும் பழமை வாய்ந்த சிற்றாலயம் புனரமைக்கப்பட்டு, நமது பேராயர் பிரதிஷ்டை செய்ய ஆயத்தமாக இருக்கிறது.

4. கேத்தி சி.எஸ்.ஐ. மேல்நிலைப்பள்ளியில் இரண்டு வகுப்பறைகளும், விளையாட்டு மைதானம் சீரமைக்கப்பட்டு சுற்றுசுவர் பணிகள் நிறைவடையும் நிலையில் உள்ளது. தாளாளர் திரு. டி. செல்வராஜ் அவர்களும், தலைமை ஆசிரியர் திரு. மெர்சி தேவக்குமார் அவர்களும் சிறப்பாக ஆசிரியர்கள் துணைக்கொண்டு, செய்து கொண்டிருக்கிறார்கள். நமது போராயர் அவர்கள் பிரதிஷ்டை செய்ய இருக்கிறார்கள்.

5. சி.எஸ்.ஐ. பாடந்துறை ட்ரைபில் ஹோம் பணி சீரமைக்கப்பட்டு நமது பேராயர் மற்றும் திருமண்டல அலுவலர்களால் பார்வையிடப்பட்டு, பிரதிஷ்டை செய்யப்பட்டது. மேலாளர் திரு. ஜான் அவர்களும், ஆயர் அருட்திரு. அமிர்தராஜ் அவர்களும் சிறப்பாக பணிகளை மேற்கொள்கிறார்கள். திரு. ஜெபகுமார் லெனின் அவர்கள் சிறப்பாக பணி செய்கிறார்.

6. நிதி மற்றும் சொத்து பராமரிப்பு பணியில் கோத்தகிரி சி.எஸ்.ஐ. வியூ ஹில்ஸ் பகுதியில் உள்ள நிலப்பரப்பில் ஒரு பகுதியை கோத்தகிரி சி.எஸ்.ஐ. மிலிதேன் போதக சேகரத்திற்கு பேராயர் மற்றும் திருமண்டல

அலுவலர்களால் ஒப்படைக்கப்பட்டு, இன்று தேயிலை நாற்று நடும் அளவிற்கு நிலம் புனரமைக்கப்பட்டுள்ளது. சி.எஸ்.ஐ. மிலிதேன் போதக சேகரத்தலைவர். அருட்திரு. அருள்பிரகாஷ், மற்றும் அவலுவலப் பணியாளர்கள் போதக சேகர குழுவினர் முழு மூச்சில் செயல்பட்டு வருகின்றனர். மேலும் திரு. அருளானந்தம், திரு. பெஞ்சமின், அருட்திரு. சாந்தரூபி குழுவாக செயல்படுகின்றனர்.

7. குன்னூர் சி.எஸ்.ஐ. ஜான் திருச்சபை ஒரு புதிய குருமனையை கட்டிக்கொண்டிருக்கிறார்கள். பேராயர் அவர்களால் பிரதிஷ்டை செய்யப்படுகிற நிலையில் உள்ளது. ஆயர்/தலைவர் அருள்திரு. கிறிஸ்டோபர் சாம்ராஜ் அவர்களின் தலைமையில் அலுவலர்கள், போதக சேகர மற்றும் பேரவை உறுப்பினர்களின் முயற்சியாலும், சபையாரின் பங்களிப்பினாலும் சிறப்பாக நடந்து கொண்டிருக்கிறது.

மேலும் நீலகிரி வட்டகையிலுள்ள அனைத்து ஆயர்களும் நன்றி படைப்பு, மற்றும் ஸ்தோத்திர பண்டிகைக்கான ஆயத்தங்களிலும், சிறை மக்களின் உற்சாகங்களும், ஆயர்களின் ஊழியங்களும் சிறப்பாக செயல்பட்டு கொண்டுவருகிறது.

குறிப்பாக நீலகிரி வட்டகையிலுள்ள அனைத்து பணிகளையும் செய்ய பேராயர் அவர்களும், பேராயர் அம்மா அவர்களும், திருமண்டல அலுவலர்கள் குறிப்பாக உபதலைவர், செயலர் மற்றும் பொருளர் அவர்களின் ஆலோசனையும், ஆதரவும், ஜெபங்களும் இருப்பதால் அநேக பணிகளை எல்லா துறைகளிலும் செயல்படுத்த முடிகிறது,

தொடர்ந்து ஜெபித்து கொள்ள உங்கள் ஆதரவுகளை கொடுக்க மிக தாழ்மையுடனும், அன்புடனும் கேட்டுக்கொள்கிறேன்.




Congrats ! Rev Bobby Alfred Joseph appointed as Bishop Chaplain of CSI Coimbatore Diocese .




# சிறுவர் பணித்துறை

கிறிஸ்துவுக்குள் பிரியமான வின்மணி வாசகர்கள் யாவருக்கும் ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவின் திருப்பெயரில் கோவை திருமண்டல சிறுவர் பணித்துறையின் சார்பாக அன்பின் நல்வாழ்த்துக்களை தெரிவித்துக்கொள்கிறோம். நம்மை இம்மட்டும் ஆசீர்வதித்து வழிநடத்தி காத்து வருகிற நம் தேவாதி தேவனை எப்போதும் ஸ்தோத்தரிக்கின்றோம். செப்டம்பர் மாதம் முழுவதிலும் சிறுவர் பணித்துறை ஊழியத்திலும் கர்த்தர் அநேக காரியங்களில் துனை நின்று வழிநடத்தினார். அவைகளை ஆண்டவர் நாமம் மகிமைப்பட உங்களோடு பகிர்ந்து கொள்வதில் மகிழ்ச்சியடைகின்றோம்.

### சிறுவர் ஞாயிறு

ஒவ்வொரு ஆண்டிலும் ஆகஸ்டு மற்றும் செப்டம்பர் மாதங்களில் திருமண்டல அளவில் அனைத்து ஆலயங்களிலும் சிறுவர் ஞாயிறானது அனுசரிக்கப்படும். அந்த வகையில் இந்த ஆண்டிலும் 10.09.2023 அன்று சிறுவர் ஞாயிறு ஆராதனையாக அனுசரிக்கும்படி அனைத்து ஆலயங்களுக்கும் சுற்றறிக்கை அனுப்பப்பட்டது. அதன் பேரில் கோவை, திருப்பூர், நீலகிரி வட்டகைகளில் ஒருசில ஆலயங்களில் 10.09.2023 அன்றும் மற்ற ஆலயங்களில் 17.09.2023 மற்றும் 24.09.2023 அன்றும் சிறுவர் ஞாயிறு ஆராதனை ஏறெடுக்கப்பட்டது. தொடர்ந்து வருகிற வாரங்களில் மற்ற ஆலயங்களிலும் சிறுவர் ஞாயிறு அனுசரிக்கப்பட உள்ளது.

ஒருநாள் சிறப்பு கூடுகைகள்

17.09.2023 அன்று திருப்பூர் வட்டகை காரமடை சி.எஸ்.ஐ. கிறிஸ்து நாதர் ஆலயத்திலும் 24.09.2023 அன்று சி.எஸ்.ஐ. கிறிஸ்து நாதர், ஆலயம் பேரூரிலும் சிறுவர் ஞாயிறு ஆராதனையை தொடர்ந்து ஞாயிறு பள்ளி பிள்ளைகளுக்கு ஒருநாள் சிறுவர் கூடுகை நடைபெற்றது. நமது திருமண்டல சிறுவர் பணி குழுவினர் இச்சிறப்பு கூடுகையை நடத்தினார்கள்.

### பள்ளி மற்றும் விடுதி சந்திப்புகள்

வழக்கம்போல இந்த மாதத்திலும் பள்ளி மற்றும் விடுதி சந்திப்பு ஊழியங்கள் நடைபெற்றது. நீலகிரி பகுதியில் டன்சன்டேல் என்னும் இடத்தில் அமைந்துள்ள நமது பிரைமரி பள்ளியில் இந்த மாதம் முதல் வேத வகுப்புகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளது. நீலகிரி வட்டகையில் 6 பள்ளிகளிலும், திருப்பூர் வட்டகையில் 4 பள்ளிகளிலும், கோவை வட்டகையில் 5 பள்ளிகளிலும் வேத வசனத்துடன் கூடிய நீதி போதனை வகுப்புகள் நடைபெற்றது.

மேலும் கோவையிலுள்ள ஆண்கள் மற்றும் பெண்கள் விடுதிகளில் முறையே செவ்வாய் மற்றும் வியாழன் மாலை 6 மணி முதல் 7 மணி வரை வேத வகுப்புகள் நடத்தப்பட்டு வருகிறது. இதில் சிறு பிள்ளைகள் முதல் வாலிபர்கள் வரை பங்கு பெற்று பயனடைகின்றனர். மாணவ மாணவிகளின் வாழ்க்கையிலும் அநேக மாற்றங்களை காண முடிகிறது.

### சிறப்பு நிகழ்வுகள்

#### ஞாயிறு பள்ளி பொறுப்பாளர்கள் மற்றும் ஆர்வளர்கள் கூடுகை: வருங்கால ஞாயிறுபள்ளி குறித்தான கருத்து பட்டறை

நமது திருமண்டலத்தில் சிறுவர் பணித்துறை ஊழியங்கள் எல்லா நிலைகளிலும் வளர்ச்சி பெறவும், குறிப்பாக தற்கால தொழில்நுட்பத்திற்கு தகுந்தவாறு தரத்தை உயர்த்துவதைக் குறித்தும் ஒரு ஆலோசனை மற்றும் முன்னெடுப்பு கூட்டமானது கோவை மற்றும் திருப்பூர் வட்டகை ஞாயிறு பள்ளி பொறுப்பாளர்கள் மற்றும் ஆர்வளர்களுக்கு 18.09.2023 அன்று சி.எஸ்.ஐ.ராபர்ட்சன் நூற்றாண்டு நினைவாலயம், சூலூரில் வைத்து நடைபெற்றது.

இக்கூடுகையை கோவை வட்டார தலைவர் அருள்திரு.A.J.ராஜா மற்றும் திருப்பூர் வட்டார தலைவர் அருள்திரு.ரமேஷ் ஜோசப், திருப்பூர் வட்டகை சிறுவர் பணி குழு உறுப்பினர் அருள்திரு.தீனதயாளு மேலும் ஆயர் பெருமக்கள் கலந்துக்கொண்டு துவக்கி வைத்தனர். மேலும் திருப்பூர் வட்டகை சிறுவர் பணிக்குழு அங்கத்தினர் திரு.காட்வின், கோவை சிறுவர் பணிக்குழு

# சிறுவர் பணித்துறை

அங்கத்தினர் திருமதி.ஜாஸ்மின் ஜாக்சன் ஆகியோர் கலந்துக்கொண்டனர். இக்கூட்டத்தில் ஞாயிறு பள்ளி பொருப்பாளர்கள் மற்றும் ஆர்வளர்கள் மொத்தம் 134 பேர் கலந்துக்கொண்டனர்.

சிறுவர் பணித்துறையின் கன்வீனர் அருள்திரு. Y.யோசபாத் சிம்மர்ஹனி மற்றும் இயக்குனர் திரு.N.J.பெனாயா ஸ்மார்ட் ஆகியோர் இக்கூடுகையின் நோக்கம் மற்றும் முக்கியத்துவம் பற்றி விளக்கி கூறினார்கள். அதை தொடர்ந்து 6 குழுக்களாக பிரிக்கப்பட்டு 8 தலைப்புகளில் ஞாயிறு பள்ளி வளர்ச்சி மற்றும் தேவைகள் குறித்து ஒவ்வொரு குழுக்களிலும் விவாதிக்கப்பட்டன. விவாத முடிவுகள் மற்றும் பரிந்துரைகள் ஒவ்வொரு குழு சார்பாக முன்னெடுத்து வைக்கப்பட்டன.

மாலையில் நமது திருமண்டல உப தலைவர் அருள்திரு.L.டேவிட் பர்னபாஸ் ஐயா மற்றும் திருமண்டல செயலாளர் அருள்திரு.S.பிரின்ஸ் கால்வின் ஐயா ஆகியோர் கலந்துக்கொண்டு பல ஆலோசனைகளை வழங்கினார்கள். மேலும் இனி வருகின்ற காலங்களில் அனைத்து பாடத்திட்டங்களும் திருமண்டலத்தின் மூலம் உருவாக்கப்படும் என்றும் அனைத்து நிகழ்வுகளும் சிறுவர் பணித்துறையினர் மூலமே நடத்தப்படும் என்று கூறினார்கள். இந்த வார்த்தைகள் நமக்கு மிகுந்த உற்சாகத்தை தரக்கூடியதாக அமைந்தது.

அனைத்து ஏற்பாடுகளையும் சிறப்பாக செய்த சூலூர் போதக சேகர ஆயர் அருள்திரு.ரமேஷ் ஜோசப் ஐயா அவர்களுக்கும், சபையின் செயலர், பொருளர், கமிட்டி உறுப்பினர்களுக்கும், DC உறுப்பினர்களுக்கும் மற்றும் ஞாயிறு பள்ளி பொறுப்பாளர்கள் மற்றும் ஆசிரியர்களுக்கும் சிறுவர் பணித்துறை சார்பாக நன்றிகளையும் வாழ்த்துக்களையும் தெரிவித்துக்கொள்கிறோம்.

கடந்த மாதம் திருச்சியில் அத்திருமண்டலத்திற்கான ஞாயிறு பள்ளி ஆசிரியர் கூடுகை நடைபெற்றது. இதில் நமது திருமண்டல சிறுவர் பணித்துறையினர் சிறப்பு விருந்தினர்களாக அழைக்கப்பட்டிருந்தனர். அதேபோல் அப்பயிற்கி முகாமின் இரண்டாம் பாகம் பிஷப் தார்ப் கல்லூரி, தாராபுரத்தில் வைத்து 09.09.2023 அன்று நடைபெற்றது. இக்கூடுகைக்கும் நமது திருமண்டல சிறுவர் பணித்துறையினர் சிறப்பு விருந்தினர்களாக அழைக்கப்பட்டிருந்தனர். புதிய பாடல்கள் செய்கையுடன் கற்றுக்கொடுக்கப்பட்டது. மேலும் ஞாயிறு பள்ளி ஆசிரியர்களுக்கான தகுதிகள், பாடம் தயாரிக்கும் முறை, விளையாட்டு மற்றும் செயல் திறன் மூலம் வேத வசனங்கள் கற்றுக் கொடுத்தல் போன்ற பயிற்சி வகுப்புகள் நடத்தப்பட்டன.

நடைபெற போகின்ற அனைத்து சிறுவர் பணி ஊழியங்களுக்காகவும், சிறுவர் பணி ஊழியர்களுக்காகவும் ஜெபித்துக் கொள்ளும்படி அன்புடன் கேட்டுக்கொள்கிறோம்.







# விடுதிகள் மற்றும் காப்பகங்கள் !



Mr D Praveen Vimal
Convenor - Hostel & Special Homes

கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவின் விலையேறப்பெற்ற நாமத்தில் விண்மணி வாசகர்கள் அனைவருக்கும் என் அன்பின் வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

உங்களில் நற்கிரியையைத் தொடங்கினவர் அதை இயேசு கிறிஸ்துவின் நாள் பரியந்தம் முடிய நடத்தி வருவார் என்ற திருமறை வார்த்தையின் படியே, கர்த்தர் தாமே நமது கோவை திருமண்டலத்திலுள்ள 5 மாணவர் விடுதிகள் மற்றும் காப்பகங்களை அது தொடங்கப்பட்ட நாளில் இருந்து இன்று வரை சில ஏற்றத்தாழ்வுகள்,சில தொய்வுகள் மத்தியிலும் அருமையாக தமது கிருபையால் நடத்திவருகிறார்.

நமது கோவை திருமண்டலத்தில் மொத்தம் 5 மாணவர் விடுதிகள் மற்றும் காப்பகங்கள் உள்ளன.

**1. சி.எஸ்.ஐ.ஜெல் நினைவு பெண்கள் விடுதி.நீலகிரி. இதில் 112 மாணவிகள் தங்கி படிக்கின்றனர்.**

**2. சி.எஸ்.ஐ.பெண்கள் விடுதி –கோவை, இதில் 120 மாணவிகள் தங்கி படிக்கின்றனர்**

**3. சி.எஸ்.ஐ.ஆண்கள் மாணவர் விடுதி.–கோவை இதில் 80 மாணவர்கள் தங்கி படிக்கின்றனர்**

**4. சி.எஸ்.ஐ.சாந்தி நிலையம் பழங்குடி மாணவர் விடுதி– பாடந்துறை –நீலகிரி இதில் 70 மாணவிகள் தங்கி படிக்கின்றனர்.**


**5.சி.எஸ்.ஐ.இருளர் பழங்குடி மாணவர் விடுதி.–நீலகிரி இதில் 15 மாணவர்கள் தங்கி படிக்கின்றனர்.**

பொதுவாக இந்த 5 விடுதிகளிலும் சிற்சில குறைபாடுகளும் அதிக தேவைகளும் இருக்கின்றன. இவைகள் குறைந்த அளவிலான கட்டணங்களையும்,தன்னார் வலர்களின் உதவிகளையும் கொண்டு நடத்தப்பெறுகின்றன. தொடர்ந்து இவ்விடுதிகளை திறம்பட நடத்த நமக்கு நல்ல திறமையான அர்ப்பணிப்புள்ள வார்டன்கள், இன்றியமையாத தேவைகளுக்கான பொருள் உதவிகள்,பண உதவிகள் தேவை ப்படுகின்றன.

நமக்கு முன்னோடிகளான நமது திருமண்டலத் தலைவர்கள் சமூக கரிசனை நிமித்தமும் , கிறிஸ்துவின் அன்பின் நிமித்தமும் ஏற்படுத்தி தந்த இந்த மாணவர் விடுதிகளை தொடர்ந்து நல்லமுறையில் நடத்திச் செல்வது நம் ஒவ்வொருவரின் கடமை ஆகும்.

ஆகவே அனைவரின் ஊக்கமான ஜெபமும்,தயாளமான தாராளமான கரிசனையோடு கூடிய பேருதவிகளும் அதிகமதிகமாய் தேவைப்படுகின்றன. நமது அனைத்து மாணவர் விடுதிகளோடும் அதின் பணிகளோடும் இறைமகன் இயேசுவின் கிருபை கூட இருப்பதாக

**ஜெபியுங்கள் ! கரம் கொடுங்கள்..!**



# கல்வி குழு



Mr D JEBASEELAN
Convenor - Join Board of Education

கிறிஸ்துவுக்குள் அன்பானவர்களே ஞானத்தின் ஊற்றாம் இறைமகன் இயேசு கிறிஸ்துவின் இனிய நல் நாமத்தில் என் அன்பின் வாழ்த்துக்களை விண்மணி வாயிலாக கூறிக் கொள்வதில் பெரு மகிழ்ச்சி அடைகிறேன் இம்மாத இதழ் வாயிலாக உங்களை சந்திப்பதில் மிக்க மகிழ்ச்சியடைகிறேன்.

உங்கள் அனைவரது ஜெபத்துடனும் ஆதரவுடனும் 35-வது திருமண்டல பேரவை கூட்டம் மிகச் சிறப்பாக நடைபெற்றது. பேரவை கூட்டத்தில் அற்பமாக என்ன பட்ட அடியேனும் கூட்டுக் கல்வி குழு கூட்டுனர் பொறுப்பிற்கு பணியாற்ற தேர்வு செய்யப்பட்டேன். அழைப்பிற்கு பாத்திரவானாக , மனத் தாழ்மையோடு, உண்மையாக, ஊழிய வாஞ்சையோடு பணியாற்ற உங்கள் அனுதின ஜெபங்களில் ஜெபித்துக் கொள்ள வேண்டுகிறேன்.

கடந்த செப்டம்பர் மாதத்தில் நம் கல்வி நிறுவனங்களின் மேலாண்மை குழு (Management Committee) திருநிலைப்படுத்தப்பட்டு கல்வி வளர்ச்சி மற்றும் உள்கட்டமைப்பு மேம்பாடு மற்றும் வசதிகள் குறித்து விவாதிக்கப்பட்டு ஆலோசனைகள் பெறப்பட்டன.

நம் திருமண்டலத்தில் உள்ள அனைத்து கல்வி நிறுவனங்களிலும், நம் மனதை வடிவமைப்பதிலும், வெற்றிக்கான பாதையில் நம்மை வழி நடத்துவதிலும், கருவி ஆகவும், ஆக்கப்பூர்வமாகவும் பங்காற்றிக் கொண்டிருக்கும் நமது ஆசிரியர்களின் கடின உழைப்பையும், ஆர்வத்தையும், அங்கீகரித்து பாராட்ட வேண்டி ஆசிரியர் தினம் செப்டம்பர் 5ஆம் தேதி மிகவும் உற்சாகத்துடன் கொண்டாடப்பட்டது.

ஆண், பெண் இருபாலரும் தாய்மொழியில் கல்வி பெரும் உரிமை பெற வேண்டும் என்ற கருத்தினால் 200 ஆண்டுகளுக்கு முன்பு மிஷினரி இயக்கங்களினால் தொடங்கப்பட்ட கல்வி நிறுவனங்கள் இன்று மக்கள் இடம்பெயர்வு, நிதி பற்றாக்குறை, அரசு கொள்கைகள், சமூக சூழல், மாறிவரும் மக்கள் மனப்பான்மை, போட்டிகள் மற்றும் சவால்கள் ஆகியவற்றால் நம் கல்வி நிறுவனங்கள் நாளுக்கு நாள் நலிவடைந்து கொண்டு வருகின்றன.

கல்வியினால் ஒரு நாட்டில் பொருளாதார நிலை மாற்றம் ஏற்படுகின்றது. அதுபோலவே பொருளாதார நிலையும் கல்வி தரத்தை கட்டுப்படுத்தும் சூழ்நிலை தற்பொழுது நிலவி வருகிறது. நமது கல்வி நிறுவனங்களின் தரத்தை உயர்த்தி ,கல்வி எளிதில் அனைத்து தரப்பினரும் அணுகக் கூடியதாகவும், உயர்தரமாகவும் இருப்பதை உறுதி செய்வதும், ஆராய்ச்சி படிப்புகளிலும் மாணவர்கள் முன்னேற ஊக்குவிப்பதும், குடிமைப்பணி, மருத்துவம் மற்றும் அரசு துறை பணிகளுக்கு உதவிகள் செய்து கொடுப்பதும் நாம் ஒவ்வொருவரின் பொறுப்பாகும் கடமையும்.நம்மிடம் உள்ள ஆதாரங்களையும், வாய்ப்புகளையும் பயன்படுத்தி திறன் படைத்த தாளாளர்களைக் கொண்டு, நம் உள்கட்டமைப்பு மற்றும் வசதிகளை மேம்படுத்துவது, நம்முடைய கல்வி நிறுவனங்களை மீட்டெடுப்பது காலத்தின் கட்டாயம்.

கூட்டுமனப்பான்மையும், இணைந்து செயல்படுதலும் நவீன மேலாண்மையின் யுத்திகள். கல்வி நிறுவனங்களின் வெற்றியில் அனைவரும் இணைந்து பங்கேற்று நல் ஆதரவுகளையும், நல் ஆலோசனைகளையும் கல்வி நிறுவனங்களுக்கு வழங்க முன்வருமாறு அனைத்து ஆலய திருச்சபை தலைவர்களையும், பொறுப்பாளர்களையும் அன்புடன் அழைக்கிறேன்

**நாம் செய்யாவிட்டால் யார் செய்வார் ! இப்போது செய்யாவிட்டால் பின் எப்போது ! மங்கி எரிகிற திரியை அணையாத தேவன் தாமே நம்மை தீண்டி ஏற்று வாராக.**





New Classroom Work & Fencing work Started in CSI Hr Sec School, Ketti



New School Building Work Started in CSI Nursery & Primary School,Rathinapuri



# Bishop's Programme for the month of October 2023

| Date | Day | Programme | Place |
|---|---|---|---|
| 01/10/2023 | Sunday | Meeting with General Secretary, WCC at Kottayam | |
| 02/10 /2023 | Monday | Coimbatore | |
| 03/10 /2023 | Tuesday | Coimbatore | |
| 04/10 /2023 | Wednesday | Coimbatore | |
| 05/10 /2023 | Thursday | Coimbatore | |
| 06/10 /2023 | Friday | Coimbatore | |
| 07/10 /2023 | Saturday | Confirmation Exam at CSI Yesu Ratchagar Aalayam, Chettipalayam | |
| 08/10 /2023 | Sunday | Confirmation Service at CSI Yesu Ratchagar Aalayam, Chettipalayam | |
| 09/10 /2023 | Monday | Coimbatore | |
| 10/10 /2023 | Tuesday | Coimbatore | |
| 11/10 /2023 | Wednesday | Coimbatore | |
| 12/10 /2023 | Thursday | Coimbatore | |
| 13/10 /2023 | Friday | Coimbatore | |
| 14/10 /2023 | Saturday | Coimbatore | |
| 15/ 10 /2023 | Sunday | Coimbatore | |
| 16/10 /2023 | Monday | Coimbatore | |
| 17/ 10 /2023 | Tuesday | Coimbatore | Coimbatore |
| 18/ 10 /2023 | Wednesday | Coimbatore | Coimbatore |
| 19/ 10 /2023 | Thursday | Coimbatore | Coimbatore |
| 20/ 10/ 2023 | Friday | Travel to Coonoor | Coonoor |
| 21/ 10 /2023 | Saturday | Confirmation Examination CSI St. John the Baptist Church Coonoor | Coonoor |
| 22/10/ 2023 | Sunday | Parsonage Dedication and Confirmation CSI St. John the Baptist Church , Coonoor | Coonoor |
| 23/ 10 /2023 | Monday | Travel to Thoothukudi | Thoothukudi |
| 24/ 10 /2023 | Tuesday | Thanks giving service Thoothukudi | Thoothukudi |
| 25/ 10 /2023 | Wednesday | Thanks giving service Thoothukudi | Thoothukudi |
| 26/10 /2023 | Thursday | Travel to Coimbatore | Coimbatore |
| 27/10 /2023 | Friday | Coimbatore | Coimbatore |
| 28/10 /2023 | Saturday | Confirmation Examination CSI Immanuel Church Coimbatore | Coimbatore |
| 29/10 /2023 | Sunday | Confirmation CSI Immanuel Church Coimbatore | Coimbatore |
| 30/10 /2023 | Monday | Coimbatore | Coimbatore |
| 31/10/2023 | Tuesday | Coimbatore | Coimbatore |

## Baduga Mission.Nilgiris.





## DBM Mission Field Visit NewHope .Gudalur.





## Celebrate Your memorable days with our Hostel Children



Boys Hostel Coimbatore




Shanthi Nilayam Padanthurai



Girls Hostel Coimbatore



Gel Memorial


We bestow Reverential Congratulations to
Rt.Rev.TIMOTHY RAVINDER
& Mrs. ANNY RAVINDER













